தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௭	மலர்
	துன்முகி, மார்கழி	
௩௨	1956 டிசம்பர், 1957 சனவரி	௯

பழமொழி.

வித்துவான் க. வெள்ளைவாரணனர் அவர்கள்,

தமிழாராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

(கரந்தைத் தமிழ்ச்சங்கக் கலைமகள் விழாவிற் பேசியது.)

இந்தத் தமிழ்ப் பெருமன்றத்திலே நிற்கும்போது பல எண்ணங்கள் தோன்றுகின்றன. தமிழவேள் அவர்களை நினைக்கும்போது—அவர்கள் கண்ணுங் கருத்துமாகக் காத்து வளர்த்த இச் சங்கத்தைப்பற்றி, தஞ்சைவாழ் பெருமக்களிடம் நான் எதைச் சொல்லப்போகிறேன்? சோணுட்டு மக்கள் இதன் வளர்ச்சியில் பங்குபெறவேண்டும் என்பதே என் அவா.

நான் பேசப்போவது 'பழமொழிகள்'. ஆமாம், உங்களுக்குத் தெரிந்த பழைய மொழிகள். ஆசிரியர் தொல்காப்பியனர் செய்யுளுக்கு இலக்கணம் கூறியுள்ளார். அதில் அடிவரையறையுள்ளவை, அடிவரையறையற்றவை என இருவகை உண்டு. அடிவரையறையற்றவை என அவர் குறிப்பிட்டுள்ளவை ஆறு. அந்த ஆறில் ஒன்றுதான் பழமொழி. அவர் பழமொழி என்று சொல்லவில்லை. 'முதுமொழி' என்று குறிப்பிட்டுள்ளார். அறிவுடையோர் நாட்டிற்கு நலம் பயக்கும் சொற்களை எந்த வடிவில் கொடுத்தாலும் 'செய்யுள்' எனப்படும். அவை சொல்லாகவோ தொடராகவோ இருக்கலாம்.

கண்ணப்ப நாயனர் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். அவர் வேட்டைக்குச் சென்றிருந்தபோது காளத்திநாதனைக்கண்டு மகிழ்ச்சிகொண்டார். இதில் உள்ள கருத்துக்களைச் சிந்திக்க வேண்டும். காளத்தியப்பர் கண்களில் உதிரம் பெருக்கெடுத்தது, அதைத் தடுக்க முயற்சிகள் பல செய்தும் முடியவில்லை. முடிவில் அவருக்கு "ஊனுக்கு ஊனிடல்" என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. இதை எண்ணித் தன் கண்ணைப் பெயர்த்து அப்பினர். இப்பழமொழி அவர் வாழ்வு நிகழ்ச்சியையே மாற்றி அமைத்தது.

பழமொழி பல்லாண்டுகளாக ஆய்ந்த நுட்பத்தின் விளைவாக இருக்கவேண்டும்; சொல் சுருக்கம் வேண்டும்; உயர்ந்த கருத்தைக்

கொண்டிருக்கவேண்டும்; வாழ்வை உயர்த்தும் ஆற்றல் அக்கருத்திற்கு வேண்டும்; எளிமையும் வேண்டும்; தான் சொல்லும் கருத்திற்கு முடிவுள்ளதாகவும் இருக்கவேண்டும்—என்று பழமொழிக்கு ஆசிரியர் தொல்காப்பியனுர் இலக்கணம் வகுத்துள்ளார். முதுசொல், மூதுரை, முதுமொழி, பழமொழி என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள். சில பழமொழிகள் நெடுங்காலமாகவே வழங்குகின்றன. ஆனல் காலப்போக்கில் அவைகளின் சொல் வடிவம் மாறுகின்றது. கருத்துமட்டும் மாறுவதில்லே. 'தந்தையைப் போல மகன்' என்பது என்றும் மாரு உண்மையாகும். இதைத்தான் இப்போது 'அப்பனேப்போல பிள்ளே' என்று சொல்கின்றனர். 'தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனுல்'' என்று தொல்காப்பியனுர் கூறியுள்ளார். மகனறிவு தந்தையறிவு என்ற பிற்காலச் செய்யுள் இக்கருத்தைத் தழுவியதே. 'கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்' என்ற அன்றைய முதுமொழி இன்று 'தன் வினே தன்னேச் சுடும்' என்று வழங்குகின்றது. ''பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்'' என்ற குறள் கருத்தும் இதையே கூறுகின்றது. ''முற்பகல் செய்தான் பிறன்கேடு பிற்பகல் தனக்குறூஉம்'' என்ற சிலப்பதிகாரக் கருத்தும் இதையே வலியுறுத்துகின்றது.

சிறந்த சொற்ருெடர்கள் பழமொழிகள் என்று கண்டுபிடிக்க முடியாத அளவில் இலக்கியத்தில் அமைந்துள்ளன. 'கனியிருக்கக் காய் கவர்தல்' என்ற பழமொழி பலராலும் ஆளப்பட்டுள்ளது. 'இனிய வுளவாக இன்னுத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' என்று வள்ளுவரும் 'கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேன்' என்று பழமொழி திருப்பதிகத்தில் திருநாவுக்கரசரும் ஆண்டுள்ளார்கள்.

செல்வம் குறைந்ததும் எல்லோரும் நீங்கிவிடுவர் என்பது உலகறிந்த ஒன்று. ஆண்டுகள் பல செல்லலாம். நாகரிகம் மாறலாம். ஆனல் பொதுச் செயல் மாருது. 'கெட்டார்க்கு நட்டார் இல்' என்னும் மூதுரை வள்ளுவருக்கும் முற்பட்டது. ''கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சே நீ பெட்டாங்கு அவன்பின் செலல்'' என்று வள்ளுவரின் தலேவி நெஞ்சைப் பார்த்துப் புலம்புகின்ருள். ''இலார்க்கு இல்லே தமர்'' என்று பின்னுளில் வந்த ஆசிரியரும் கூறியுள்ளார். பழமொழிகள் எல்லாம் வாழ்வின் முடிந்த முடிபுகளேக் கூறுவன. அனுபவத்தால் கண்டறிந்த பழமொழிகள் பிற்காலத்தார்க்கு வாழ்வில் அமைதி அடையவும் பாதுகாப்பாகவும் பயன்படுகின்றன. நெல்குற்றி அரிசி எடுத்தல் பயன்தரும் செயல். பயன் தராச் செயல்களே மேற்கொள்ளுவோரின் செயல் ''உமிகுற்றி கை வருந்துதலுக்கு'' ஒப்பிடப்படுகின்றது. சில பழமொழிகள் வரலாற்றை நினேவுபடுத்துகின்றன. கொங்கு நாட்டில் வழிப்பறி செய்வோர் நிறைந்திருந்த காலமும் உண்டு. மன்னர்கட்கு அடங்

காது அவர்கட்குத் தொல்லை கொடுத்த நிலையும் உண்டு. சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரர்க்குக் கொடுத்த பொருளை இறையருளால் வேடர்கள் வழிப்பறி செய்தனர். அதைப்பற்றி சுந்தரர் சொல்ல வந்த இடத்து, இறைவனை எண்ணிச் சென்றால் துன்பம் ஏற்படாது என்ற கருத்தில் 'கொங்கே புகினும் கூறைகொண்டு ஆறலைப்பாரிலை' என்று கூறுகின்றார். இப்பழமொழி சுந்தரர் காலத்தில் கொங்கு நாட்டின் நிலையை அறிய உதவுகின்றது.

முன்றுறை அரையனார் என்ற புலவர் நானூறு வெண்பாக்களால் ஆன பழமொழிகளைச் சேர்த்து 'பழமொழி நானூறு' என்று தொகுத்துள்ளார். அதில் 'கோங்கேறினர் ஏமாருர்' என்றுள்ளது. அது 'ஏமருக் கொங்கேறினர்' என்றுபிழைபட உணரப்பட்டது. இலக்கியத்திலே உள்ள பழமொழிகளை அடிப்படையாகக்கொண்ட பதிப்பு வெளி வருதல் வேண்டும். நீலம் நிறம் மாருது. இதை, 'நீலமுண்டது வெள்ளையாகாது' எனப் பழமொழி நானூறு கூறுகின்றது. "நிலமலை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே!" என்று திருஞான சம்பந்தர் திருச்சிராப்பள்ளி பதிகத்தில் சொல்லியுள்ளார்.

சில நேரங்களில் பொழுதும் பொருளும் வீணுகின்றன. ஆனல் அதை இனிமை என்கின்றோம். அவர்களைக் கண்டு நம்மாழ்வார் 'உணங்கல்கெட கழுதை உதட்டாட்டம் கண்டு என்ன பயன்? எனக் கேட்கின்றார். எளிய செயலுக்குச் சிலர் பெருமுயற்சி செய்வதைப் பார்க்கின்றோம். கோழிமுட்டைக்குக் குறுந்தடி வேண்டுமோ? என்று கூறுகின்றோம். கோழி வெண் முட்டைக்குக் குறுந்தடி எதற்கு?" என்று திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளார். 'இராவணன் ஆண்டாலென்ன? இராமன் ஆண்டாலென்ன? என்ற பழமொழி பிற்காலத்தில் எழுந்த ஒன்று. சங்க காலத்தில் இது எழுந்திருக்க முடியாது. சில பழமொழிகளால் சமுதாய வாழ்வைக் காணலாம். "நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்" என்று குறள் கூறுகின்றது.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னது' என்ற பழமொழியை எல்லோரும் அறிவோம். புல்லென்பது இங்கு அற்பமான நிலையில் வந்த பொருளைக் குறிக்கின்றது. இதே கருத்தைச் சங்க இலக்கியத்திலேயும் காண்கின்றோம். புலியால் அழிக்கப்பட்ட விலங்கு வலத்திலே விழுந்தால்தான் புலி உண்ணும். இடத்தில் விழுந்தால் அதை உண்ணது. இங்கு "வலத்தால்" என்பது வெற்றியால் கிடைத்தது எனவும், இடத்தில் என்பது தன்இடத்திலே கிடைப்பது எனவும் பொருள்படும். புலி தனது முயற்சியால் கிடைத்த இரையையே உண்ணும். இதேபோன்றுதான் முயல்விட்டுக் காக்கை பின் போதல்' என்ற பழமொழியும்.! தசையுள்ள முயலை விட்டுவிட்டுப் பறக்கின்ற காக்கையை வேடர் விரும்பார் என்பது

(260-ஆம் பக்கம் பார்க்க.)

சென்ற இதழின் தொடர்ச்சி.

திருவண்ணமலைக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,

தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

சித்தாந்த கலாநிதி, திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், மெய்கண்டார் காலம், இரண்டாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலம் என்று முடிவு செய்துள்ளார்களேயெனின் அது பொருந்துவது ஆகாது. அவர் குறித்துள்ள கல்வெட்டுத் தோன்றிய காலம் பதினெட்டு என்பதும் பொருத்தமில்லை. பதினெட்டு ஆயின் மூன்றும் இராசராசன் காலமாகும். கல்வெட்டுத் தொகுதியில் பதினறு என்றேயிருக்கின்றது.

பொதுச் செய்திகள்.

நித்தமும் சிறுகாலை சந்தியில் இறைவர் பஞ்சகவ்வியம் ஆடியருளும் பொருட்டு நிவந்தம் அளிக்கப்பட்டிருந்தது. கோமூத்திரம், கோமயம், பால், தயிர், நெய் இவை பஞ்ச கவ்வியங்களாகும். இச்செய்தியை "திருவண்ணமலை உடையார்க்கு பஞ்சஹவ்வியம் ஆடியருள நித்தமும் சிறுகாலை சந்தியில் திருவண்ணமலை என்னும் நாழியால் கோமூத்திரம் உழக்கும், ஹோமயம் ஆழாக்கும், பால் நாழி உழக்கும், தயிர் நாழி உரியும், நெய் நாழி உரியும் ஆக இப்படி நித்தமும் செய்வதற்கு"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

இக்கோயிலில் விளக்கு எரிப்பதற்கு நெய்யின்பொருட்டு ஆடுகளும் பசுக்களும் விடப்பட்டனவன்றி, தயிரமுதுக்கும் பசுக்கள் விடப்பட்டிருந்தன. இறைவனுக்கு நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமம் சாத்துவிக்கத் திருச்செங்கழுநீர் செய்கிற குவளை கிழவனுக்கு ஜீவிதத்

பொருள். மனிதனுக்கு உயர்ந்த நோக்கம் வேண்டும். மனிதன் தன் முயற்சியால் பொருள் தேடவேண்டும் என்பதே பெறப்படும் பொருள். முயல்விட்டு — முயற்சியைவிட்டு காக்கை — காத்து வைத்த பொருள்—என்று சொல்லவேண்டும்.

மக்களின் நுண்ணிய அறிவு, உயர்ந்த நோக்கம், வாழ்வின் பயன், பல நூல்களைப் படித்துப் பலகாலும் பெற்ற அனுபவங்கள்—இவை எல்லாம் திரட்டித் தருவன பழமொழிகள். அவைகளை முறையாகத் தொகுத்து வெளியிடுவதில் அறிஞர் பெருமக்கள் முயல்வார்களாக. வணக்கம்.

துக்குத் திக்கானைப் பெருமாள் நல்லூரில் நிலம் விடப்பெற்றிருந்தது. சிதம்பரம் கல்வெட்டுக்களில் பல இடங்களில் "**கண்டு விடு தந்ததாவது**" என்ற தொடர் காணப்படுகிறது. விடு என்பதை வீடு என்றும் படிக்கலாம். ஆனால் பொருள் தோன்றவில்லை. "திருவண்ணாமலை உடைய நாயனார்கோயில் தானத்தாரும், தேவகன்மிகோவில் கணக்கனும் கண்டு **விடை** தந்ததாவது" என்னும் திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டுப் பகுதியால் **விடை** என்பது விடு எனத் தவறாகச் செதுக்கப்பட்டுள்ளது என்றுகொள்ளவேண்டும்.

வலங்கை, இடங்கை சாதிப்பூசல்கள் நாட்டில் நடைபெற்று வந்தன. திருவண்ணாமலையில் இப்பூசல் இல்லை. இவ்வூரில் இரண்டு தெருவில் கைக்கோளர்க்குமுன்பு பூர்வம் நடந்துபோந்த சங்கு, தண்டு, யானை, சாமரம் மற்றும் வலங்கைக்கு உள்ள வரிசைகள் எல்லாம் நடக்கக் கடவதாக உத்தரவு இட்டதை வீர தேவராயர் குமாரர் விஜயபூபதி உடையாரின் சகம் 1340இல் (கி. பி. 1418) தோன்றிய கல்வெட்டு உணர்த்துகின்றது. திருக்காளத்தியில் நூற்றுக்கால் மண்டபத்தைக் கட்டியவர் கிருஷ்ண தேவ மகாராயர் ஆவர். அது சகம் 1438 தாது வருடத்தில் கட்டப்பட்டதை இவ்வூர்க் கல்வெட்டு அறிவிக்கின்றது. திருவண்ணாமலைக் கோயிலில் **பெரிய பாட்டு** பாடிவந்த வழக்கத்தை ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.

திருநீற்றுமடலுக்குத் **திருநீற்றுக்கோயில்** என்னும் பெயருண்மையை இக்கோயில் கல்வெட்டால் அறியலாம். **சக்கிலிக்குத் தரிசனம் காட்டிய வரலாறு** ஒன்று இக்கோயில் கல்வெட்டால் புலப்படுகிறது. இச்செய்தியை, "சக்கிலிக்குத் தெரிசனம் காட்டி தோலாலே செய்த திருவடி நிலைக்கு மேகடுக்குகைக்கு பத்துக்குப்போத செம்பொன் அறுகழஞ்சு" என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரின் 24ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டில் காணலாம். திரிபுவனச்சக்கரவர்த்தி இராசாதிராச தேவரின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டொன்று, மிருகத்தை வேட்டையாட எய்த அம்பு இலக்குத் தப்பி வேறு ஒருவன்மீது பட்டு அவன் இறக்க எய்தவனுக்குப் பிராயச்சித்தமாக, திருவண்ணாமலை உடையார்க்கு ஒன்றரைத் திருவிளக்கு நாடோறும் எரிப்பதற்கு 52 பசு விடுமாறு உத்தரவு செய்யப்பட்டதைக் குறிக்கின்றது.

காப்புரைகள் :— அறஞ்செய்யப் புகுந்தோர் தாங்கள் செய்த அறச் செயல்களைக் கல்லில் பொறித்து அவைகள் என்றும் நிலைபேறுடையனவாதல்வேண்டுமென்னுங் கருத்தால்,

அக்கல்வெட்டுகளின் இறுதியில் பாதுகாவலைக் குறித்துச் செதுக்கப்பட்டிருக்கும் தொடர்கள் காப்புரைகளாகும். அம் முறைப்படி இக்கோயில் கல்வெட்டுகளில் வந்துள்ள காப்புரைகள் பின்வருவன :—

1. "என் வம்சத்தில் இத்தர்மம் இறக்குவான் கங்கை யிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவத்தைப் படுவான். இது பன்மாஹேஸ்வர ரக்ஷை (South Indian Inscriptions Volume VIII Inscription Number 126)

2. "இதில் ஒருமாச் சின்னம் கொள்வான் கங்கைக் கரை யில் குரால் பசுக்கொன்றான் பாவம் கொள்வான்" (S. I. I. Vol. VIII Ins. No. 127)

3. "மாறுவான் சிவதுரோகியுமாய் புக்கு ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறந்தானுமல்லானாய், கோமாம்சத்தைப் புசிப்ப வனுமாய், கங்கையிடை குமரியிடை குரால் பசு கொன்றான் பாவம் கொள்வான்" S. I. I. Vol. VIII. Ins. No. 80)

4. "இவை நானுதல் என் வம்சத்தில் உள்ளாராதல் விலக்குவான் கங்கையிடைக் குமரியிடைக் குரால் பசுக்கொன் றார் செய்த பாவங் கொள்வான். பெண்டிழந்தானும் செருப்பு மெடுத்து தம் பலமும் தின்று அவன் கால்கீழ் இருந்தவனுவான். இது பன்மாகேஸ்வர ரக்ஷை. இது விடுவித்தான் கவுணியர் பெருமான்" (S. I. I. Vol. VIII Ins. No. 127)

கிருஷ்ண தேவராயர் செய்த அருந்தொண்டுகள் :—

திருவண்ணுமலை உடையார் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டினர். இதற்கு முன்பிலுள்ள வசந்தன் தெப்பத் திருநாளுக்குத் திருக்குளம் வெட்டி, இதற்குத் தண்ணீர்வர, திருமலைதேவி அம்மன் சமுத்திரத்தை வெட்டினர். பதினொரு நிலையுடன் கூடிய கோபுரத்தையும், ஏழாந்திருநாள் மண்டபத்தையும் கட்டினர். விநாயகர்க்குத் திருத்தேர் பண்ணு வித்தார். வானவ தரையன் சோழன் வாசல் கதவு, கதவு கால், உத்தம சோழன் திருவாசல் கதவு, கதவுகால், ஷெ பலகாணி வாசல், இவைகளுக்குப் பொன் பூசினர். இந்த வாசல் முன் கொடுங்கைக்குப் பத்தரைமாத்தில் பொன் பூசினர். உண்ணுமுலைநாச்சியார் கோயில் கால் கதவுகளுக்கும், சடைப் பெருமாள் நயினர் சந்நிதிக்கு மேற்குவாசல் கால் கதவுகளுக்கும், ஸ்தூபிக்கும் பொன் பூசினர். நாச்சியார்கோயில் மடப்பள்ளிக்கு முன் ஆராவமுதக் கிணற்றை வெட்டினர். இறைவனுக்குக்

கிருஷ்ணராயன் பதக்கம், நாகாபரணம், வாகுவலயம், உத்தரீயம். என்னும் அணிகலன்களைச் செய்து வைத்தார். இந்திர விமானம், வெள்ள விந்திகை, பொன்னின் சேகண்டிகை இவைகளைச்செய்து வைத்தார். அஸ்திரதேவ நாயனுர்க்கு உச்சிமேல் பொன்பூசிய வெள்ளித் தகட்டைச் செய்துவைத்தார். திருமஞ்சனம் எடுக்க வெள்ளிக் குடம் செய்துவைத்தார். தம்பேரால் கிருஷ்ணராய மகாராயர் சந்திக்குக் கட்டளையாக அரிசி, எண்ணெய்க்காப்பு, பழம், கற்பூரம், இவைகளையும், திருமஞ்சனம் எடுப்பார், பெரிய திருப்பாட்டு ஓதுவார், தேவரடியார், அத்தியயனம் செய்பவர் முதலானவர்களையும் ஏற்படுத்தினுர்.

அருங்குன்றங்கிழான் நாற்பத்தெண்ணுயிரப் பிள்ளையும் மங்கையர்க்கரசியாரும் செய்த தருமங்கள் :—

மங்கையர்க்கரசி மண்டபத்தைக் கல்லாலே செய்வித்து அதில் சுந்தரப்பெருமாளையும் நாச்சியாரையும் எழுந்தருளிவித்தனர். பிரமதேசத் தோப்பிலே நூற்றைம்பது தெங்கம்பிள்ளைகளை வைத்துப் பயிராக்கினர். இருபத்துநாலாவது பஞ்சத்திலே காசுக்கு உழக்கு அரிசி விற்கையில் பூண்ட பொன்னையும் தேடிய பொருளையும் நெல்லையும் அடைய இட்டு திருநதியைக் கட்டி ஏரியை வெட்டினுர்கள். திருநந்தா விளக்கினுக்கு முப்பத்திரண்டு பசு விட்டனர். ஐந்தலை மணி செய்து வைத்தனர். சக்கிலிக்குத் தரிசனம் காட்டி தோலாலே செய்த திருவடிநிலைக்கு மேகடுக்குகைச் செம்பொன் இட்டனர். நாச்சியார்க்குத் திருக்கண்வேர் வாளி இரண்டுக்கு நாற்கழஞ்சு பொன் இட்டனர். இவை நிகழ்ந்த காலம் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு இருபத்து நான்காவது ஆகும்.

பிறர் செய்த தொண்டுகள் :—

தாண்டவ அண்ணன் இக்கோயிலில் மணிமண்டபத்தைக் கட்டுவித்தார். கிணறு ஒன்றைத் தோண்டுவித்தார். திம்மப்பர் குடும்பத்தைச்சேர்ந்த சின்ன சேவு என்பவர் கோபுரம் ஒன்றைக் கட்டியுள்ளார். தஞ்சை நாயக்கர் வம்சத்தைச்சேர்ந்த சேவப்ப அச்சுதர் தங்கக் கலசங்களை வைத்துள்ளனர்.

புலவர்கள் :— திம்மைய சின்னசேவால் கட்டப்பெற்ற பதினெரு நிலை கோபுரத்தைப்பற்றி, சத்தியமங்கலம் சீநிவாச தீட்சதர், எல்லப்ப நயினுர், உண்ணுமுலை நயினுர், கழுமதத்து முதலியார் இவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இவர்கள் வரலாற்றை அறிய இக்கோபுரப் பாடல்கள் பெரிதும் பயன்படும்.

பாட்டுக்குள்ளே கதை.

சாலை. இரா. இளந்திரையன், B. A. (Hons.)

கவிதை என்பது என்ன? அதன் பொது இயல்புகளும் சிறப்பு இயல்புகளும் யாவை? அதைக் கற்கும் முறைகள் யாவை?— என்பன போன்ற வினாக்கள் கிளம்பிக் கவிதை ஆராய்ச்சியையும் சுவை நெறியையும் விரிவுபடுத்தி வருகின்றன. சிறந்த கவிதைகளின் வரிசையிலே வைத்து எண்ணப்படும் சங்கப் பாடல்களின் ஒரு பகுதியான அகப் பாடல்களையும் அவற்றைச் சுவைக்கும் முறைகளையும்பற்றி ஈண்டுக் காண்போம்.

மனித உள்ளத்தின் ஆழம் அகம். அதன் அடிப்படையில் முகிழ்த்த வாழ்வே அகவாழ்வு. அதுபற்றிய பாடலும் அகத்தின் இயல்பைக் கொண்டிருக்கவேண்டும் என்பது எளிய உண்மை. உள் மனத்தில் ஏற்படும் ஒவ்வொரு சிறிய இயக்கமும் தனக்குத்தானே ஒரு முழுமையை உண்டாக்கிக்கொண்ட பின்னரே ஓய்கிறது. இல்லையேல் அது துடித்துக்கொண்டே இருந்து, மனத்தில் பிற எண்ணங்கள் தலை எடுக்க முடியாதபடி செய்கிறது.

அமைதியான நீர்நிலை போன்றது அகம். அதில் ஒரு சிறிய பொருள் விழுமானால், அதனால் உண்டாகும் இயக்கம் அந்நீர் நிலையின் முழுமைக்கும் சென்றே முடிகின்றது. இதுபோலத் தான் மனத்தில் எழும் சிறிய உணர்ச்சி, மனத்தை முழுவதுமாக இயக்கித் தன் வயப்படுத்திக்கொள்ளுகின்றது. அஃதாவது தன் செயலில் ஒரு முழுமையைப் பெற்றே முடிவடைகின்றது.

இச் செய்திகளை நன்றாக அறிந்திருக்கும் நாம், 'கிணற்றிலே ஒரு பருக்கைக் கல்லைப் போட்டேன்' என்று ஒருவன் சொன்ன உடனேயே, 'கிளப்' என்னும் ஒலியோடு கல் நீரில் பாய்ந்ததையும்; அதனால் தோற்றுவிக்கப்பட்ட சிறிய அலைகள் வட்ட வளையங்கள்போல் விரிந்து விரிந்து சென்று கிணற்றுச் சுவர்களில் மோதி நெளிந்ததையும் அவன் கூறாமலே கற்பனை செய்துகொள்ளுகிறோம். அகப் பாட்டுக்களைச் சுவைக்கவும் இக் கற்பனைத் திறன் வேண்டும். ஏனெனில் அகப்பாட்டு, ஒரு முழு நிகழ்ச்சியின் முக்கியப் பகுதியை மட்டும்தான் நமக்குக் கூறும். மிகுந்துள்ளவற்றை நாமே கற்பனை செய்து கொள்ளுதல் வேண்டும். நாமே கற்பனை செய்துகொள்ள வேண்டும் என்பது நம்மேல் ஒரு பொறுப்பைச் சுமத்திக்கொள்ளுவதன்று. பாட்டு, தன் அளவில் சொல்லும் செய்தி மிகச்

சிறிதாயினும், அதனின்று ஒரு முழுக் கதை உருவம் பெறும் அளவிற்கு அதனிடம் ஆற்றல் இருக்கவேண்டும்; அவ்வாற்றலைக் கண்டுகொள்ளும் திறனையும் கற்போர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தனது சிறிய பாட்டால் கற்பனைக் கன்று ஒன்றை நம் உள்ளத்தே நடுவது கவிஞனின் கடமை. அதை உணர்வு நீர் வார்த்து அறிவு உரமிட்டு வளர்த்து, பூவும் பிஞ்சும் கனியுமாகி அது காட்சியளிக்கும் உயர்வினைக் காணவேண்டுவது நம் பொறுப்பு.

இச் சிறப்பியல்பைப் பெற்றிருப்பதே அகப்பாட்டாகும். அப்பாட்டுக்குள்ளே ஒரு முழுக்கதை இருக்கின்றது. அதைத் தன்னுள் அடக்கிய பாட்டோ சிறிய உருவத்துடன், பனித்துளி போல இருக்கின்றது.

இப்பெரிய செயலை நிறைவேற்ற ஆசிரியனுக்குத் துணையாக இருப்பன, அவன் கூற எடுத்துக்கொள்ளும் செய்தியின் நலன், அவனது கற்பனைத் திறன், அவனது சொல்லாட்சித் திறன் என்பனவாம். அகப்பாட்டில் பேசப்படும் செய்தி வாழ்க்கை. எனவே அதில் ஆசிரியன் தொட்டுக் காட்டும் பகுதி யாவரும், என்றோ ஒருநாள் அறிந்தது அல்லது அறியப் போவதாகவே இருக்கின்றது. இதனால் மனித மனத்தை அச்செய்தி எளிதில் இயக்க முடிகிறது. கூறப்பட்ட செய்தி முன்னரே நம் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒன்றாக இருந்தால் கவிதை நம்மை இளமை நோக்கி இழுத்துச் செல்லுகின்றது. பழைய நிலை ஒன்றில் கொண்டுவிடப்பட்ட நம் உள்ளம், தொடர்புடைய இன்ப துன்ப உணர்ச்சிகளையெல்லாம் எழுப்பிக்கொண்டு கவிதை தரவிரும்பிய முழுக் கதையையும் உருவாக்கி மகிழ்கின்றது.

அச்செய்தி இன்னும் நம் வாழ்க்கையில் ஏற்படாத ஒன்றாக இருந்தால், முதலில் திகைப்பும் வியப்பும் ஏற்படுகின்றன. அவற்றிடையே ஓர் இனிய கற்பனையை நம் உள்ளம் படைக்கின்றது. இந்த ஆற்றல் அதற்கு எங்கிருந்து வந்தது? வேறெங்கிருந்தும் வரவில்லை. தனக்குள்ளேயே மறைந்திருந்ததுதான் இப்போது வெளிப்பட்டிருக்கின்றது. மனித மனம் குறிப்பிட்ட சில இயல்புகள் உடையது. அவ்வியல்புகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் செயல்படுகின்றன. இதுவரை செயல்படாதிருந்த இயல்பு —பாட்டின் செய்தியால் தூண்டப்பட்டு—இப்போது செயல்படுகின்றது. ஏனெனில் மனித இயல்புகளில் ஏதாவது ஒன்றைத் தூண்டும் ஆற்றல் பெற்றதே அகப்பாடல். அது கூறும் செய்தி வாழ்க்கையைப்பற்றியதாக இருப்பதே அதற்குக் காரணம்.

ஒருவேளை கவிதை கூறும் செய்தியும் நம் வாழ்வின் அப்போதைய நிகழ்ச்சிகளும் ஒத்திருந்துவிட்டால் நாம் நம்மை மறந்து பாட்டில் ஈடுபடுகிறோம். நாம் முன்பே செய்துவைத்த கற்பனைகளை எல்லாம் அதற்குச் சூட்டி மகிழ்கிறோம்.

இவ்வாறாக, கவிஞன் கூற எடுத்துக்கொண்ட செய்தியே, அதை முழுமையாக்கும் ஆற்றலை நம்மிடம் தோற்றுவிக்கிறது. இந்த முதற் கட்டத்திலேயே நாம் கவிஞன் வாழ்க்கையை ஊடுருவி நோக்கும் ஆற்றல் பெற்றவனா இல்லையா என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்து வருவது ஆசிரியனின் கற்பனைத் திறன். இது மேற் குறிப்பிட்ட செய்தியின் இயக்கத்துக்கு உறுதுணையாக அமைவது, குறிப்பிட்ட ஒரு செய்தியைச் சொல்லும்போது, அதனோடு யாதானுமொன்றால் தொடர்புடைய நிகழ்ச்சி அல்லது பொருளை நயமாக இணைத்துவிட்டு, இரண்டும் சேர்ந்து விரைவாகவும் நயமாகவும், தான் விரும்பிய உணர்ச்சியைக் கற்போருள்ளத்தில் எழுப்புமாறு செய்வதே கவிஞனின் கற்பனைத் திறனாகும். அதுவே கவிதைக்கு உகந்த கற்பனை. அகப் பாட்டில் கூறப்படும் கருப் பொருள்களை ஆசிரியன் இந்த முறையிலேயே பயன்படுத்துகின்றான். அகப்பாட்டில் பயனில்லாமல் ஒரு புல்கூட இடம் பெறுவதில்லை. கவிஞன் கற்பித்திணைக்கும் ஒவ்வொரு பொருளும் நிகழ்ச்சியும், அவன் கூறும் செய்தி ஒரு முழுக் கதையாக விரிவடைய உதவுகின்றன.

கற்பனையில் ஆசிரியன் எப்போதுமே கவனமாக இருக்கின்றான். தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு, அவன் வருவான் என்னும் நம்பிக்கையை ஊட்டினால்தான் கதை முழுமை பெற இயலும். இல்லையேல் ‘அறுந்த தந்தி’யாகிவிடும்! அவன் போன வழிகள், ‘பிடிபசி களைஇய பெருங்கை வேழம், மென்சினை யாஅம் பொளிக்கும், அன்பின (குறுந். 37) வாகவே அவளுக்குத் தோன்றுகின்றன. காதலியைக் கண்டு கண்டு இன்புற்றுச் சென்றும் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யாது வாளாவிருக்கும் தலைவன் இரவிலே தலைவியைக் காணவரும்போது, ‘எல்லி வருநர் களவிற்கு நல்லையல்லை நெடுவெண் நிலவே’ (குறுந். 47) என்றே தோழி கூறுகிறாள். இல்லாவிடில் தலைவன் வந்து வந்து போவான்; கதை திருமணத்தை நோக்கித் திரும்பாதல்லவா?

இனி, கவிஞனின் சொல்லாட்சித் திறனும் பாட்டுக்குள் கதை காட்டுவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. சொற்களிலே பலவகை உண்டு. இனிய உணர்ச்சிகளை வெளியிடக் குடிப்

பிறப்பு உடைய சொற்கள் வேண்டும். எண்ணக் கீற்றுகளை உண்டாக்க விருந்துச் சொற்கள் வேண்டும். யாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையின் எந்தப் பகுதி சுட்டிக் காட்டப்படுகின்றதோ அதற்கும் அது தூண்டும் முக்கியச் சுவைக்கும் ஏற்ற சொற்களாக அமையவேண்டும். தலைவன் பொருளுக்காகப் பிரிய எண்ணுகிறான் அதனை உணர்ந்துகொண்ட தலைவியின் காட்சி.

"குறுக விருந்துதன் கூரெயிறு தோன்ற வறிதகத்தெழுந்த வாயல் முறுவலள்" எனக் காட்டப்படுகின்றது. 'வறிதகத் தெழுந்த முறுவல்கூடப் போதாதென்று வாயல் முறுவலாக்கு கின்றான் ஆசிரியன். காவியத்திலே கவிக் கூற்றும் நாடகத் திலே துணைப் பாத்திரங்களின் உரையாடலும் பின்னர் வரப் போவனவற்றைச் சிறப்புற விளக்கும். இங்கே 'வாயல் முறுவல்' கதையின் முடிவை முதலிலேயே அறிவிக்கின்றது! அம்மட்டோ கதையின் போக்கையே மாற்றியமைக்கின்றது!

கதையுள்ளடக்கிய மற்றொரு பாட்டு :

"காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே;
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே"

இப்பாட்டுக் கூறும் செய்தி 'கால்கள் ஓய்ந்துவிட்டன; கண்கள் ஒளி இழந்துவிட்டன; பலரைக் கண்டேன்; (யாரைத் தேடி வந்தேனோ அவர்களைக் கண்டேனில்லை! என்பது, கவிஞன் கற்பித்துக்கொண்டவை.) இரவு நேரம், விரிந்த வானம், நிறைந்த விண்மீன்கள், பகலிலே கண்ட பல காதலர்கள்......... கவிஞனின் சொல்லாட்சித் திறன் ஒவ்வொரு சொல்லிலும் எதிரொலிக்கின்றது.

இந்த நாலடிப் பாட்டுக்குள்ளே ஒரு தலைவன் தலைவியரின் களவு வாழ்க்கை அடங்கியிருக்கின்றது; இருவரில் ஒருவர் வீட்டார் திருமணத்துக்கு ஒப்பவில்லை என்னும் நிகழ்ச்சி மறைந்திருக்கின்றது; தலைவனும் தலைவியும் எங்கோ ஓடிவிட்டார்கள், செவிலி தேடி வந்திருக்கிறாள், பகல் முழுவதும் (ஒருவேளை பல பகல்கள்) அலைந்த களைப்பில் வெள்ளி பூத்த விரிவானின்கீழ் அமர்ந்திருக்கிறாள் என்பனவும் புலப்படுகின்றன. கதை முடியவேண்டும். அது செவிலியின் எண்ணத்தில் தெரிந்துவிடுகின்றது; நம் வீட்டுப் பெண்தான் ஓடிவிட்டாள் என்று தேடி வந்தால் இங்கே எத்தனை "நம்வீட்டுப் பெண்கள்"! என்று வியப்படைகிறாள். கவிதையின் நேர்பொருள்

கலித்தொகை.

வித்துவான் திரு. மு. அருணசலம் பிள்ளை அவர்கள்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

(காந்தைத் தமிழ்ச் சங்கக் கலைமகள் விழாவில் பேசியதன் சுருக்கம்.)

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. "கற்றறிந்தாரேத்துங்கலி" எனப் பாராட்டப்பட்டது. அகப்பொருள்பற்றியது. 150 கலிப்பாக்களைக்கொண்டது. ஐம்பெரும் புலவர்களால் பாடப்பட்டது.

பாலை :- தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து செல்லும் பகுதி. தோழிகுற்றேவல் மகளெனச் சொல்லப்பட்டபோதிலும் மிக ஆற்றல் வாய்ந்தவள். புதுமணம் செய்துகொண்ட இருவர் இருக்கின்றனர். ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய மனம் இடம் தராது. தலைவன் இல்வாழ்வின்பத்தோடு தனது கடமையை உணர்கின்றான். ஆகவே பொருள் தேடப் புறப்பட முடிவு செய்கின்றான். "வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்" என்பது தமிழில் தவிர வேறுமொழிகளில் இல்லை. எழுத்தும் சொல்லும் நம் மொழிக்குச் சிறப்பாம். ஆனால் பொருள்

இத்துடன் முடிகின்றது. ஆனால் மிக விரிந்த வானம், (அகல் இரு விசும்பு!) அதில் மிகப்பல விண்மீன்கள், இவற்றைவிட மிகப்பலர் (பலரே மன்ற!) காதலனோடு காடு கடக்கும் மங்கையர்! இந்த எண்ணம் அவளுக்குப் புதிய கருத்தைத் தெரிவிக்கின்றது; இப்படிச் செல்வது இயல்புதான் போலும். இந்த எண்ணம் உண்டானதும் வீட்டுக்குத் திரும்பத்தானே எண்ணுவாள்? கதை அழகாக முடிந்துவிடுகிறதல்லவா?

இத்தகு சிறந்த பாட்டுக்களே அகப்பாட்டு வரிசையில் இடம் பெறத்தக்கவை. அவைகளே அக இயல்புக்கு ஒத்தவை. அவ்வியல்பே கலைப் பண்பு சான்றது, எனவே அகப்பாட்டுக்களைக் கற்கப் புகுவார் அவற்றின் செய்தி, கற்பனை, சொல்லாட்சி என்பவற்றை எண்ணி அறிந்து அவை கூறும் முழுமைக் கதையைச் சுவைக்கவேண்டும். பதவுரை, பொழிப்புரைகளுக்கு அப்பாற்பட்ட செய்திகள் அகப்பாட்டில் உண்டு என்று அறிதல் வேண்டும். அச்செய்திகளைத் தரும் ஆற்றலில்லாதனவற்றை அகப்பாட்டுக்களென்று எண்ணி இடர்ப்படுதலாகாது. அகப்பாட்டைச் சுவைப்பது என்பது அதனுள் இருக்கும் முழுமைக் கதையைத் தேடி அறிவதேயாகும். அவ்வறிவு ஆழ்ந்த விழைவு கொண்ட அகத்தில்தான் பிறக்க முடியும். ஏனை மனங்கள் இன்ப முத்துக் காணாது நீந்தி உழல்வனவே.

எல்லார்க்கும் பொதுவானது. ஒத்த உரு, திரு, குடியில் வந்தவர்கள் தங்கட்குள் மணம் செய்துகொள்ளல் மரபு.

காதலேவிடச் சிறந்தது ஈதலே! இதைப் பாலைக்கலியில் மூன்று தாழிசைகளில் அழகாகக் கூறுகின்றார் பெருங்கடுங்கோ.

"தொலைவாகி யிரந்தோர்க் கொன்றீயாமை யிளிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருளாகுமோ?"

"இல்லென யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ"

"இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ?"

இல்லாமையால் துன்புறுவோரை மூன்று வகையாகப் பிரிக்கின்றார். 1. தொலைவாகியிரந்தோர் — முன்பு உண்டான பொருளெல்லாம் கொடுத்துத் தொலைத்துப் பின்பு இல்லையாய் வந்து இரந்தவர். 2. இல்லென இரந்தோர் — எக்காலமும் எமக்குப் பொருளில்லையென்று கூறிவந்து இரந்தவர். 3. இடனின்றி யிரந்தோர் — தம் இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருளில்லை யென்று கூறிவந்து இரந்தவர் என்று மூவகையாகப் பிரித்துக் கூறுதல் சிறப்புடைத்து. திருவள்ளுவரும் ஈதலின் சிறப்பைக் கூறவந்த இடத்து,

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" என்று கூறுகின்றார்.

மற்றென்று தோழி கூற்று. பொருள் சிறந்தது அன்று. மனைவி மக்களோடு கூடிவாழும் இல்வாழ்வே சிறந்தது என்று கூறுகின்றாள்.

"இளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோகை தம்முட் டழீஇ யொரோகை
யொன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினு
மொன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு"

என்பதுதான் அப்பாட்டு. ஒரோகை என்பதற்கு 'ஒரோ ஒருகைகளாலே' என்று நச்சினார்க்கினியர் பொருள் எழுதியுள்ளார். ஒரோ என்பதற்கு "ஒவ்வொரு" என்று பொருள் செய்யமுடியுமா? 'ஒரோ ஒரு குலத்துத் தலைவன்' என்று நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்தில் எழுதியுள்ளார். 'ஒரோ ஓர் ஒரோவொன்று" என்று உரையாசிரியர்களும் எழுதியுள்ளனர்.

ஆகவே 'ஓரோஓகை' என்பதாக இருக்கவேண்டும் என்பது என் எண்ணம்.

தலைவன் பொருள் தேடச் செல்லும் வழியிடைப்படும் பாலை நில இயல்பு,

"வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்"

என்று சொல்லப்பட்டுள்ளது. பிறர்க்குக் கொடுக்கும் மனப்பான்மை, சிறுத்தசெல்வன், யார்கண்ணும் முறையற்ற செயல் செய்து இசை கெட்டகுடியின் இறுதி — இவை சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

குறிஞ்சி :- மலையும் மலைசார்ந்த இடமும். தலைவன் தலைவியர் கூடிவாழும் தன்மை கூறப்பட்டுள்ளது. ஊழ்வினை கூட்டிவைக்க இருவர் தம்முள் இணைந்தனர். களவொழுக்கம் வெளிப்படுமுன் தலைவி மணந்துகொள்ள விரும்புகிறாள். தோழி அதை எடுத்துத் தலைவனுக்குக் கூறியும் அவன் பொருட்படுத்தாதிருக்கின்றான். இந்நிலையில் தலைவன் சிறைப்புறத் தானாக ஒருத்தி அவனைக் குறைகூறவும் மற்றொருத்தி அவனைப்புகழ்ந்தும், பாடுகின்றனர். இதை வள்ளைப்பாட்டு என்று கூறுவர். 'அகவினம் பாடுவாந் தோழி' என்ற குறிஞ்சிக் கலிக்கு "இது தோழியும் தலைமகளும் தலைமகனது மலையை வாழ்த்திப் பாடுகின்ற வள்ளைப்பாட்டிற், தோழி இயற்பட மொழியத் தலைமகள் இயற்பழித்தமை, தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரைய வருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது" என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். மேலும் 'முகைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின் வகைசாலுலக்கை' என்பதற்கு அவர் "மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரலென்றதனாற் பயன் விரைந்து கோடற்பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும், புலானாற்றத்தையும் முத்தையுமுடைய மருப்பாற் செய்த உலக்கையென்றதனாற் பயன் வரைந்துகோடற்பயனின்றிப் புகழ்ச்சி மாத்திரையேயாகத் தோழி இயற்பட்டு மொழிந்ததாகவும் இறைச்சியிடத்தே பொருள் பிறந்தவாறு காண்க" என்றும் உரை செய்துள்ளார். உரை பொருத்தமாக இல்லை. இவை

மாறி இருக்கவேண்டும். ஐந்தாவது குறிஞ்சிக் கலியில் இயற்பட மொழிந்தார் யார்? இயற்படுத்தி மொழிந்தார் யார்? என்ற ஐயம் எழுகின்றது. "வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர்கிளவி" என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் இப்பாட்டிற்கு அவர் எழுதிய உரையும் தம்முள் மாறுபட்டுள்ளன. கலிப்பாப்படி தோழி தலைவனைப் புகழ்கின்றாள் தலைவி அவனை இகழ்கின்றாள் என்று கொள்ளவேண்டும்.

மருதம் :- உலகில் சிறந்தவைகளாகக் கருதப்படுபவை இரண்டு. ஒன்று கல்வி. மற்றொன்று பொருள். பொருள் அழியக்கூடியது என்று சொல்வது மரபு. ஆனால் மருதக்கலியுள் தோழி "வீதல் அறியா விழுப்பொருள் நச்சியாங்கு" என்று கூறுகின்றாள். இதற்கு உரையாக, செல்வமுடையவன் கெட்டான், ஆனால் செல்வம் கெடவில்லை என்று நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது சிறப்பாக உள்ளது.

நெய்தல் :- குறட்பாக்களுக்கிலக்கியங்களாகத் திகழும் கலிப்பாக்களும் உள்ளன. வரையாது வந்தொழுகுகின்ற தலைவனைத் தோழி நெருங்கி மணம் வேண்டுகின்றாள்.

"கடிமலர்ப் புன்னைக் கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடி நெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கீழ்ப் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ!

" ஆய்மலர்ப் புன்னைக்கீழ் அணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ!

திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
யிகழ்மலர்க் கண்ணளாய்த் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ".

என்று தலைவனைப் பார்த்துத் தோழி 'உன்னுடைய குடி, வாய்மை, புகழுக்குக் குற்றமாகாதோ?" எனக் கேட்கின்றாள். இங்குப் புகழ் எனப்படுவது நாணத்தை. "பிறர் பழியும் தம் பழியும் நாணுவர் நாணுக்கு உறைபதி என்னும் உலகு" என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

" ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்"

என்ற குறட்பாவிற்கு இலக்கியமாக இக் கலிப்பாத்திகழ்வது காண்க.

சென்ற இதழின் தொடர்ச்சி.

தமிழிலக்கியங்களிலுள்ள உவமச்சுவை.

முதுபெரும் புலவர், பெருஞ்சொல் விளக்கனார்,

திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்.

'தாலிகாட்ட' என்பது மாங்கலியத்தைக் கட்டுவதற்குமுன் அதைக்காட்டி ஆசீர்வாதம் பெறுதல் ஆகும். பழமொழி சிந்திக்கவேண்டிய ஒன்று. சமுதாய சிறுமை பெருமைகளை அளக்கப்பயன்படுவது. இன்னொன்று "பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" என்பது இது தமிழ் மானத்திற்கு உகந்த தன்று. "எமக்கே கலங்கல் தருமே!" என்று தொடங்கும் புறப்பாட்டிலே ஒரு போர்வீரன் சொல்கின்றான், "நேற்றுவரை என் மன்னன் படையிலிருப்பதற்குப் பெருமைகொண்டேன். ஏனென்றால் நேற்றுவரை என்னைச் சாப்பிடவைத்துப்பின் அவன் சாப்பிட்டான். ஆனால் இன்று போர் என்றதும் அவன் முன் சென்றான். என்னைப் பந்திக்கு முந்தச் செய்தான்" என்று அவன் வருந்திக் கூறுகின்றான். ஔவைகூட பந்திக்கு முந்திய கதை ஒன்று உண்டு. பழமொழிகள் தலைப்பிற்குப் பொருத்தமில்லாவிடினும் அறிஞர்கள் சிந்திக்க வேண்டு கின்றேன்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமது உறையூர்ப்புராணத்திலே பழைய புலவர் பாடல்களுக்கு மாதுளம் பழத்தையும் புதிய புலவர்களின் பாடல்களுக்கு மாமுந்திரியையும் உவமைகளாகச் சொல்கின்றார். அரசியல் செல்வாக்குப்பெற்ற சிலர் இன்று எளிமை என்ற பெயரில் மொழி மரபைக் கெடுக்கின்றனர். கடற்கரை என்பதற்குக் கடல்க்கரை என்று எழுதுகின்றனர். அவர்களெல்லாம் இலக்கியத்தில் கைவைப்பது தீமையையே தரும் என்று ஐயாயிரம் கோயிலில் துணிந்து கூறுவேன்.

சிவஞான யோகிகள் கண் சென்றுபற்றும்பொறி என்றும் ஏனையன நின்றுபற்றும் பொறிகள் எனவும் குறிப்பிடுகின்றார். அரசன் குடிகள்படும் இன்பதுன்பங்களைத்தானே சென்று பற்று கின்றான். இதற்கெடுத்துக்காட்டாக, சிலப்பதிகாரம், பெருங் கதை, பழமொழி, திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களில் பேசப்படும் பொற்கைப் பாண்டியன் கதையைக் கூறலாம்.

இனி உயிரைப்பற்றி எடுத்துக்கொள்வோம். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று மோசிகீரனார் புறநா

னூற்றிலே பாடியுள்ளார். நோய், வறுமை, முதுமை முதலியவை களால் உடலுக்கு ஊறு ஏற்பட்டாலும் அதை நீக்கி அந்த உடலில் இருக்கவே உயிர் விழைகின்றது. 'சாதலின் இன்னாதது இல்லை' என்று வள்ளுவரின் தீர்க்க தரிசனம் கூறுகின்றது. எவ்வளவுதான் துன்புற்றாலும் உடலைவிட்டு உயிர் நீங்க விரும் பாமைக்குக் காரணம் என்ன என்று வள்ளுவரைக் கேட்டால் அதற்கு அவர் இழந்தும் சூதாடலை விரும்புகின்றனரே அதுஏன்? என வினவுகின்றார். பொருளிழந்தவர் இழந்த பொருள் மீண்டும் வந்துவிடும் என்ற நம்பிக்கையால்தான் மீண்டும் மீண்டும் ஆடுகின்றனர். நம்பிக்கையின் அடிப்படை யில்தான் இவ்வுலகமே இயங்குகின்றது. இந்தச் சூதைப்போன்று தான் உயிரும் இருக்க விரும்புகின்றது.

"இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்" என்று வள்ளுவர் கூறுகின்றார்.

இனிப் பிறர்கூற்றுத் தன்கூற்று உவமைகளைக் காண்போம். குறுந்தொகையில் ஒரு தோழி தலைவனைப் பார்த்துத் தலைவியின் ஆசையைக் கூறுகின்றாள். தலைவியின் ஆசை பெரிது ஆனால் அவள் உயிரோ சிறிது. அது எம்முன்றிலில் சிறிய கொம்பில் தொங்கும் பெரிய பலாப்பழத்தைப் போன்றுள்ளது என்று உரைக்கின்றார். பிறர் கூற்றுவமைப் பெரும்பாலும் வள்ளுவரி டம் இல்லை. ஆனால் இன்பத்துப்பாலில் பலர் கூற்றுகளாகச் சொல்கின்றார். அறத்துப் பாலில் வருகின்ற இல்லற வாழ்க்கை தான் உண்மை. அதுவே உலக வழக்காய் இன்பத்துப் பாலில் காட்டப்பெறும் நிகழ்ச்சிகள் நாடக வழக்குப்பற்றியன. அவை உண்மையல்ல.

மானம் என்பதற்கு மக்கள் தம் நிலையிலிருந்து வழுவாமை என்பது பொருள்.

"தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையினிழிந்தக் கடை" என்ற குறட்பாவுக்குப் பரி மேலழகர் உரை சிறந்துள்ளது. ஆனால் இன்று மனம்போன போக்கிலே பல புதுவுரைகள் எழுகின்றன. புத்துரைகட்குக் காரணம் மறுமலர்ச்சி என்று தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். மறு என்பதற்குக் குற்றம் என்ற பொருளும் உண்டு.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம்வரின்" என்ற குறளுக்கு 'உயிரை விடுவதனால் தங்கட்கு மானம் வந்து சேரின், கவரிமா அன்னர் உயிர்விடுவர்' என்று பொருள்கொள்ளவேண்டும்.

கண்ணப்பர் வேட்டை ஆடுகின்றார். வன விலங்குகள் வலையில் வந்து விழுகின்றன. அவைகளை வேட்டை நாய்கள் பற்றுகின்றன. இந்நிகழ்ச்சியை அழகான உவமையோடு சார்த்திப் பெரிய புராண ஆசிரியர் கூறுகின்றார். 'ஐம்பொறிகளின் வேறுபட்ட செயல்களை மனம் பற்றுவதுபோல' என்பதே அவ்வுவமையாகும்.

"பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலவிய இரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளின்அள வுளவே'

என்பது அப்பாடல்.

கடைசிப் பகுதியாகக் குற்றங்களை நீக்கி ஆளும் பகுதிகளைப் பார்ப்போம். மானமிழப்பதற்குமுன் மனிதன் உயர்ந்தவனாக இருக்கின்றான். மானமிழந்தபின் சாய்க்கடையாக ஆகின்றான். 'தலையினிழிந்த மயிரனையர்' என்கின்றார் வள்ளுவர்.

'இருதலைக் கொள்ளி எறும்புபோல' என்று பலர் ஆண்டனர். ஆனால் மாணிக்க வாசகர் "இருதலைக்கொள்ளியின் உள் எறும்பொத்து" என்று சொல்கின்றார். 'ஊருணி நீர்நிறைந் தற்றே' என்பது வள்ளுவன் வாக்கு. ஏரி நிறை நீர் ... என்பது திருநாவுக்கரசர் மொழி. ஆடவர் கண்ணைத் 'தாமரை மலர்போலும் கண்' என்று சொல்லுதல் மரபு. தாமரை மலரானது காலை மலர்ந்து மாலை குவியும் தன்மையுடையது. 'காலை மலர் செங்கமலக் கண்' என்று சொல்வதின்மூலம் சேக்கிழார் குறை களைகின்றார்.

கடைசியாக ஒரு பாட்டுடன் என்னுரையை முடிக்கிறேன். பெயர் அறியமுடியாத ஒரு புலவர் அழகாகத் தென்றல் நடை பற்றிக் கூறியுள்ளார். முன்னாளில் தமிழ்ப்பொழிலில் அது வெளிவந்துள்ளது.

'மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதனால்
திங்கள் நிறைந்தவராய் சேயிழையார் நடைபோல்
தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்!"

என்பதில் புலவன் தென்றல் நடையை எவ்வாறு சிறப்பித்துள்ளான் என்பதை நினைக்கும்போது நெஞ்சம் மகிழ்கின்றது. ஒரு மணி தமிழ் படித்தால் அதைப்பற்றி இரண்டு மணி நேரம் சிந்திக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்ச்சுவையை முழுவதும் அநுபவிக்கமுடியும்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

கரந்தைக் கோவை.

[வித்துவான், ச. பாலசுந்தரம்]

தலைமகளைப் பாங்கி புலவி தணிவித்தல்.

401 கழுவும் பிழையிலை யாயினும் உள்ளங் கசிந்துவரின்
தழுவுங் கரந்தையிற் றண்டமிழ் நூன்முறை சாற்றுகின்ற
வழுவும் அமைதியும் ஓர்ந்திலை யோபெரு மானடிகள்
தொழவும் புலவியைத் தோற்றிடி னும்பிழை தொல்குடிக்கே.

தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல்

402 நூலே விழியென நோக்குங் கரந்தையில் நோகுநெஞ்சே!
காலே விழியெனக் காரிருள் வாய்பல கால்நடந்து
வேலே துணையென மீண்டவப் போது விருந்தளித்த
சேலே விழியெனும் செந்திரு வல்லளிச் சேயிழையே.

பாங்கி அன்பிலை கொடியை எனத் தலைவனை இகழ்தல்

403 இன்புறும் பாமகிழ்ந் தேத்துங் கரந்தையில் இல்லறத்தால்
அன்புறும் போதயல் போயினிர், அன்றிவள் ஆகமெலாம்
பொன்பெறும் என்றனிர் இன்றிவள் மேற்பழி போடுகின்றீர்
தன்புறந் தானறி யாருரை செய்வது தாமெளிதே.

ஆயிழை மைந்தனும் ஆற்ருமையும் வாயிலாக வரவெதிர் கோடல்

404 குழலைப் பழித்தென துள்ளங் குழைக்கும் குழவியின்தேன்
மழலைக் கிளவியை வாயிற் புகுத்தியென் வன்புலவி
அழலைத் தவிர்த்தனிர் அன்பாற் கரந்தை யருந்தமிழ்த்தாய்க்
கழலைப் பணிந்தவர் கல்லா திருப்பதெக் காவியமே?

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடிணங்கிய
மைந்தனை இனிதிற் புகழ்தல்

405 தாடளைத் தான்பரித் தேரொடு தன்னையும் தண்டமிழால்
நாடளிக் குங்கரந் தைத்தலை வன்வர நன்குணர்ந்தேன்
வீடளிக் குந்தலை முத்தித ரும்புகழ் வீறளிக்கும்
பீடளிக் கும்மகப் பேறெனும் வாய்மையைப் பெண்ணணங்கே.

தலைவி தலைவனைப் புகழ்தல்

406 மரையிலை நீரென வண்டமிழ் நின்றவ் வடமொழியை
உரையிடைக் கொள்ளுறும் உண்மையைப் போன்றவ் உளத்தள
புரையிலை காதலும் பொய்யிலை போலும் புரிகுழலாய்! [வில்
கரையிலை அன்பினுக் குங்கரந் தைப்பதி காவலர்க்கே.

---

401 கழுவும்பிழை-கழுவாய் உள்ள பிழைகள். பிழையுடையதாயினும் சான்ருேர்க்கொப்ப முடிந்ததைத் தழுவிக்கொள்ளுதல் வழுவமைதி எனப்படும். 403 புறம்-முதுகு. 404 வாயிற் புகுத்தி-தூதாகவிட்டு. 405 தாள்தளைத்தான்.

பாங்கி தலைமகளைப் புகழ்தல்

407 அகழ்வார்ப் பொறுக்குமிம் மாநில மாயினும் ஆழமிகின்
நிகழ்நீர்ப் பெருக்கின் நிலைதடுக் கும்,தமிழ் நேர்கரந்தைப்
புகழ்வார்க் கருள்தலை வன்புரி தீமை பொறுத்தருளும்
திகழ்வார் குழலியின் கற்பினுக் கொப்பெது செப்புதற்கே ?

29. கல்வியிற் பிரிவு

கல்விப் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல்

408 எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி ஐந்தும் இனிதுணர்ந்து
பழுத்தவ ராயினும் பைங்கரந் தைத்தமிழ்ப் பாவலர்கள்
கழுத்தள வென்பரக் கல்வியை யார்கரை கண்டவரென்(று)
இழுத்துரை யாடினர் எண்ணமென் னேவவர்க் கேந்திழையே?

இதுவுமது

பயன்றரு செந்தமிழ்ப் பண்பொடு சீர்த்தியைப் பாரறிய
நயன்பெறக் காட்டலும் நண்பொடு வாழ்பிற நாட்டவரின்
பயன்றரு நற்கருத் தைக்கரந் தைத்தமிழ்ப் பாற்செயலும்
முயன்றில ரேல்கடன் முற்றிலர் என்றனர் பொய்குழலே.

தலைமகள் கார்ப்பருவங்கண்டு புலம்பல்

409 கார்போல் கரந்தையின் முத்தமிழ்க் காட்சியைக் காவலரிப்
பார்மேல் வழங்கிடச் சென்றமை கண்டவிப் பாவிமுகில்
நீர்மேல் சுமந்துமின் வாளொடு நேர்ந்திடி நெட்டுயிர்த்திவ்
ஊர்மேல் புகுந்தென தின்னுயிர் உண்ணவிண் ஓங்கியதே.

தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்

410 செய்யுங் கடமையைச் செம்மல் புரிந்தருள் சேர்கரந்தை
உய்யும் படிவரும் உண்மையை ஓர்ந்த உயர்நிலைவான்
கொய்யும் மலர்மிகக் கோடையின்வெப்ப குளிரவிண்ணீர்
பெய்யும் எனவறி யாயிதைக் காரெனப் பேசுவதே?

30. காவற் பிரிவு

தோழி தலைவன் காவற் பிரிவு தலைமகட்குணர்த்தல்

411 பாவலர் பாவலர் பைங்கரந் தைத்தமிழ் பான்மொழியே
காவலர் காவலர் என்பது காட்டுதல் கண்ணிமகிழ்
நாவலர் நாவலம் பூம்பொழில் போற்றியிந் நன்மரங்கள்
தூவலர் தூவுமுன் னேவரு வேனெனச் சொற்றனரே.

தலைமகள் கூதிர்ப் பருவங்கண்டு வருந்தல்

412 நீர்காவல் கொண்டவர் நீடுங் கரந்தை நெறிகுழலாய் !
ஊர்காவ லோடென் உளங்காவல் கொண்டென் உயிர்காவலர்
தார்காவல் கொண்டநன் மார்பினர் என்று தமியளெனைப்
பீர்காவல் கொண்டபின் பேய்வாடை வந்து பிணித்திடுமே.

---

406 மரை-தாமரை 409 காட்சி-அறிவு. 410 செம்மல்.தலைவன். 411 பா வலர், பாஅலர்-காவல்அர் காவலர். 412 நீர்-நீர்மை உயிர்-காவலர்-உயிரைக் காவாதவர். பீர்-பசப்பு 416 நகை-மகிழ்ச்சி. நண்ணினர்-வந்தார்.

தோழியாற்றுவித்தல்

413 பாடலி ழைப்பவர் வாழ்கரந் தைப்பதி பாவைவிரல்
கூடலி ழைத்துளம் கூம்புதல் நீங்குக கூதிரென
வாடலி ழைக்குமிவ் வன்பொழு தோர்ந்தநம் வள்ளலினி
நீடலி ழைக்கிலர் இன்றுநெ ருங்குவர் நீணகரே.

31. தூதிற் பிரிவு

தூதிற் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல்

414 தீதுபு ரிந்தவர்க் கும்,தமிழ்ச் செம்மையைத் தேறலராய்
வாதுபு ரிந்தவர்க் கும்,மதி மாட்சிசெய் வண்கரந்தைத்
தாதுபு ரிந்தல ருங்குழ லாய்! நம் தலைவரருள்
தூதுபு ரிந்தனர் தோற்பினும் வெல்லினும் துன்பமென்றே.

தலைமகள் முன்பனிப் பருவங்கண்டு வருந்தல்

415 தெற்கும் வடக்கும் திசைமுரண் அன்றியும் செந்தமிழர்
சொற்கும் பொருட்கும் துயர்தந்த தம்மொழி தொல்லைமிக
நிற்கும் பனியும் நெடுவாடை யேபகை நீங்கவருள்
கற்கும் கரந்தையர் கோனெனைக் காப்பதைக் கற்றிலரே?

தோழி ஆற்றுவித்தல்

416 திகைதணிக் குந்தமிழ் தேறல ராய்ச்செருக் குற்றவர்தம்
மிகைதணிக் குங்கரந் தைப்பதி போலுயிர் மெல்லியல்! முன்
பகைதணிக் கும்வினைப் பண்பொடு சென்றவர் பண்வளருன்
நகைதணிப் பாரலர் நல்வலத் தேரொடும் நண்ணினரே.

32. துணைவயிற் பிரிவு

துணைவயிற் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி
தலைமகட் குணர்த்தல்

417 அளந்தந்தம் நோக்குதற் காற்றுத ஆற்றலர் அன்புநிறை
உளந்தந்த நண்பினேர் வேந்துமுன் வேண்டலின் ஓர்துணை
களந்தந்து வெல்லுதல் கண்ணிநங் காவலர் கல்வியெனும்[யாய்க்
வளந்தந்து வாழ்கரந் தைப்பதி நீங்கினர் வாணுதலே.

தலைமகள் பின்பனிப் பருவங்கண்டு வருந்தல்

418 திக்கற் றவர்க்கருள் செய்யுங் கரந்தையிற் செந்தமிழ்நூல்
புக்குத் திளைத்தவர் போர்த்துணை யாயினர் பூண்டநட்பை
மிக்குக் கணித்தவர், மெல்லியல்! என்னுயிர் வேண்டியிருள்
கக்கும் மறலியிப் பின்பனி என்பதைக் காண்கிலரே.

தோழி ஆற்றுவித்தல்

419 செருப்புக் குதவி செயத்துணிந் தன்பிற் சிறந்தவர்செந்
நெருப்புற் றிரும்பனி அற்சிரம் வந்து நெருக்கிமதன்
கருப்புற் றிடுமலர் வாளியுன் ஆவி கவருமுனர்
விருப்புற் றிருங்கரந் தைப்பதி மேவினர் மெல்லியலே.

---

418 கணித்தவர்-கணக்கிட்டவர். 419 செரு-போர். அற்சிரம்-பின் பனி. 421 எய்க்கும்-இளைக்கும் 423 துடியிடை-தலைமகள்.

33. பொருள்வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தல்

420 திறத்தாற் செழுந்தமிழ் செய்யுங் கரந்தையிற் றேமொழிநல்ல
புறத்தா னெழுகியிங் கோருயி ரானவர் ஓங்குலகில்
அறத்தால் வருவதை இன்பமென் றுலதை ஆக்குதற்குப்
புறத்தே நிகழ்பொருள் வேண்டுமென் றூரது பொய்யலவே?

தலைமகள் இளவேனிற் பருவங்கண்டு வருந்தல்

421 கையாற் களிறு மரம்பிளந்தெய்க்குங் கடுங்கடத்தே
பொய்யாப் பொருள்செயும் பூட்கைய ராய்க்கரந் தைத்தலைவர்
மெய்யாய்ப் புகுந்தனர் வேம்பு பழந்தரும் வேனிலெனை
நெய்யாய் உருக்குதல் யார்சென் றவர்க்கு நிகழ்த்துவரே?

தோழி ஆற்றுவித்தல்

422 வாடினர்க் கீயவும் மாண்புடன் வாழவும் வான்பொருளைத்
தேடினர் சென்றசெ ழுங்கரந் தைத்தமிழ்ச் செம்மலுனை
நாடிநம் மூர்வரல் சாற்றுமிவ் வேனிலும் நாண்மலர்வாய்
ஆடிநம் பால்வரும் தென்றலும் ஆயிழை ஆற்றுகவே.

தலைமகன் தலைவி உருவு வெளிப்பாடு கண்டு சொல்லல்

423 கொடிமலர்க் கொம்பினை வேயொடு கூட்டிய பாசறையுள்
வடிகணை வாள்கிடு காயவெல் லாமிசை வாழ்கரந்தை [வளர்
முடியிடைக் கொள்நறும் முத்தமிழ் போன்றெழில் மொய்த்து
துடியிடை யேயெனத் தோற்றியிக் கானிலும் தோன்றிடுமே

பாசறை முற்றிமீண்டூர்வயின் வந்த தலைவன் பாகற்குச் சொல்லல்

424 சீர்வந்த செந்தமிழ் சேர்கரந் தைப்பதி தேர்வலவா!
தேர்வந்த தேறுக வென்றசொல் லென்செவிச் சேருமுனர்
ஊர்வந்த தென்றனை மாவந்த தோவுளம் ஓடியதோ
நேர்வந்த கானமும் காணலன் வாழிய நீடுநின்றே!

தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு சொல்லல்

425 விழுத்தவத் தாற்பெறும் மெல்லிய லோடகம் மேவினன்யான்
எழுத்தொடு சொற்பொருள் இன்பம் பொருளறம் ஏன்றுநெறி
பழுத்துயர் சீர்கரந் தைத்தமிழ் போலவிப் பார்மகிழச்
செழித்தினித் திங்கள்மும் மாரியும் பெய்க திருமுகிலே!

வாழ்த்து.

வாழி! கரந்தைத் தமிழ்ச்சங்கம் வண்ணமுற
வாழி! அதனுறுப்பு மாண்புரைக்குங் கோவையுடன்
வாழி! தமிழ்நாடு வான்புலவர் வாழ்தமிழர்
வாழி! தமிழ் பாடும் வாய்.

(கரந்தைக் கோவை முற்றியது.)

"முதல் ஐந்திசைப்பண்கள்"

ப. சுந்தரேசன்,

சங்கீத வித்துவான் இசைத்தமிழ் ஆராய்ச்சியாளர், கும்பகோணம்.

(கரந்தைத் தமிழ்ச்சங்கக் கலைமகள் விழாவிற் பேசியது.)

இக்காலம் நம் தென்னிந்திய நாட்டில் பழமையும் புதுமையும் கொண்டு விளங்கிவரும் சிறந்த கலைகளில் இசைக்கலை மிகவும் சிறப்பானதாகும். தென்னிந்திய இசைக்கலையை பிற்காலத்து வடநாட்டாரும், தற்கால உலகத்தினரும், பழைமை மாறாததும் தனக்கே உரிய ஒரு தனிப்பண்பாடு உடையதுமான ஒரு சிறந்த இசைக்கலை எனப் பாராட்டி வருவதனை இசைவாணர்கள் நன்கு அறியக்கூடும்.

தென்னிந்திய இசை என்றைக்குமே நிறவுணர்விசை எனப்படும். சில நூற்றாண்டுகளாக இந்நாட்டில் இக்கலை வெறும் பாடல்களைப் பாடிவரும் வழியிலும், ஆசிரிய மாணவ வழிமுறையிலும் வளர்ந்துவந்தபோதிலும், இலக்கண முறைகளை எல்லாம் அவ்வளவாகப் பெருக விடவில்லை. இக்கலையில் உள்ள பண்கள் இராகங்கள் யாவும் மிகப் பழைமையானவை என்பதிலும் இவைகட்கு இலக்கணங்கள் கூறும் நூல்களும் மிகப் பழங்காலத்திருந்து, இந்நாட்டிலேயே இருந்து வருகின்றன என்பதிலும் ஐயப்பாடு ஒன்றும் கிடையாது.

இவைகளை ஆராயுமிடத்து கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த இந்நாட்டு இசையிலக்கண வடமொழி நூல்கள், அதற்கு முந்திய தமிழ் வடமொழி இசை நூல்கள், இக்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள இசை நூல்கள் என்றின்னன பல இசை நூல்களை ஆராயப் புகுவோமாளுல், பண்கள் தோன்றிய முறையும் அதன் பெயர் வகைகளும் காலத்தால் முந்திய பண்டைய இசைத் தமிழ் என்பதனை நன்கு உணர்வதோடு ஆராய்ச்சியில் முடிந்த முடிவு பல காணுவதற்கான அமைப்பும் சூழ்நிலையும் பண்டைய தமிழிலேதான் கொண்டு சென்றுவிடும் என்பதும் அடியேன் போன்ற இசை பயின்றவர்க்கன்றி ஏனையோர்க்கு விளங்கா.

நமது தமிழ் மொழி மிகப் பழங்காலத்திலேயே மூன்று வகையாகப் பகுத்து உணரப்பட்டுள்ளதை யாவரும் அறிவர். அவை இயல், இசை, நாடகம். இவற்றுள் இசை என்பது என்ன வகையில் கூறப்படுவது என நன்கு அறியவேண்டும்.

பழைய தமிழ்ச் சொற்கள் சிலவற்றைக்கொண்டு இசை என்றால் (ஏதோ இக்காலம் சில வழக்குகளை ஒட்டிக்காண) பொருத்தம்–அதாவது, இசை, இசைவு, இசைதல் எனப் பலவாறாகக் கூறலாம். ஆனால் மொழி வழியில் அச்சொல்லினை ஆராய்ந்தால், இசை என்ற சொல் ஒரு பொருத்தமான ஒலியைக் கூறுவதாகக் கொள்ளல் கூடும். அதாவது ஒலியைப் பலவாறாகக் கூறலாம். அஃதும் ஒத்த ஒலியாக இருந்து உணரப்படுவதாகவும் இருக்குமாயின் அந்த ஒலியினை இசையெனக் கூறல்வேண்டும். இதனை

“ இசையெனப் படுவதியம்புங்காலை
ஒத்துணர் ஒலியின் நீட்சியதாகும் ” என்ற நூற்பாவினால் நன்கு நாமும் ஓர்ந்துணரலாம். இதனை இன்னும் சற்று சிந்தித்து உணரலாம். அ–என்ற ஒலியும் எழுத்தும் நமக்குத் தெரியத்தானே செய்கிறது! பிறகு ஆ–என நீள்வதும் உண்டன்றோ! இவ்வொலியே ஆ , , , , , , , என நீண்டு ஒலித்துக்கொண்டே இருக்குமாயின் இதற்கு நம் பண்டைப் பெரியோர்கள் என்ன கூறுகின்றார்கள்? ஒரே ஒலி ஒத்த முறையில் அளபிறந்து உயிர்க்குமாயின் —

அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிய இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர் — எனத் தொல்காப்பியர் அப்பொழுதே கூறிவிட்டாரல்லவா! ஆகவே அவர் காலத்திற்கு முன்பே நரம்பின் மறை எனப்படும் இசை நூல்கள் இருந்துள்ளதை நாமும் அறியத்தானேவேண்டும்!

இனி இத்தகைய ஒலிகளை முதன் முதல் யார்–எங்கே–எப்பொழுது கண்டார்கள் என ஆராய முற்படுவதன்முன் நமது தமிழ் நூல்கள் என்ன கூறுகின்றன என ஆய்வதே சாலச் சிறப்புடையதாகும். இது பற்றி ஒரு பேருண்மையை அருட்டிரு விபுலாநந்த அடிகளார் ஒருவரே முதலில் கண்டவராவார்கள். அதுவே பெரும்பாணாற்றுப் படையில் ஒரு சில பகுதியாகும்.

பெரும்பாணாற்றுப்படை : 500 அடிகளை உடையது. ஆசிரியப்பாவால் ஆகியது. பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றானொருவன், காஞ்சி நகரத்தில் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அவ்விளந்திரயனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.

ராசுசு—தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவன்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇயக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
யொன்றமை ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்நு ணவிர்புகை கமழக் கைமுயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின் ... ...

இவ்வடிகளின் கருத்துகளால் பண்டைய தமிழ் மக்களில் ஒரு சாரார் ஆகிய முல்லை நிலத்து ஆயர் மக்கள் கண்ட கருவி குழற் கருவியே என்பது நன்கு புலனாகும். இக்கருவியும் ஓரோவழி இயற்கை முறையில் அம்மக்களால் ஆக்கப்பெற்றதாகும்.

இக்கருவியில் அம்மக்களால் இடப்பட்ட துளைகள் முதன் முதல் மூன்று. பின்னர் ஐந்து. அதன் பின்னர் கால வகையில் ஏழு ஆகும். இக்கருத்துக்கள் தனித்தனியேவிளக்கப்பெற வேண்டியவை. பண்டைய மூன்று துளைகளின் ஒலிகளை ஒரு வகையில் அடிப்படையாகக்கொண்ட ஒருவகை இசைப்போக்கு முறையாலேயே மேற்கூறிய இப்பாடலை அடியேன் பெரியோர் களாகிய நுங்கள்முன் பாடிக்காண்பித்தேன். நிற்க.

முதன் முதலில் குழலில் வாய்வைத்தூதிய முதல் ஒலிக்குப் பழைய பெயர் **தாரம்** எனப்பட்டது.

இக்காலம் தாரம் என்ற சொல்லினைக் கூறத்தொடங்கினல் ஏதோ முதல் தாரம் இரண்டாந்தாரம் என்ற வகையிற்றான் பெரும்பாலோர்க்கு நினைவு வரும். தாரம் எனும் சொல் பகுபதம். ஆதலால் தார் × அம் = எனப் பிரிபடும். தார் பகுதி. அம் விகுதியாகும்.

திருக்குறள்—அதி = எஎ. படைமாட்சி ஏழாவது குறள்.

"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து" —என்ற இடத்தும்

புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலத்துள் கொற்றவை நிலையில்.

"தமருட் டலையாதல் தார் தாங்கிநிற்றல்
எமருள்யா மின்னமென் றெண்ணல்—அமரின்
முடுகழலின் முந்துறுதன் முல்லைத்தார் வேந்தன்
தொடுகழன் மைந்தர் தொழில்" என்ற இடத்தும் தார்

எனும் சொல் தூசிப்படையை குறிப்பது காணலாம். தூசிப்படை என்பது போருக்குச் செல்லும் மன்னனது படைகளில் முன் எச்சரிக்கையோடு முதலாகச் செல்லும் படையாதலால் முதற் படை எனப்படும். இன்றும் பல தமிழ் நூல்களில் வரும் சொற்களினாலும் தார் எனுஞ்சொல் முதல் என்ற பொருளோடும் விளங்குவது காணலாம்.

ஆகவே பண்டைய இசைத் தமிழ் முதல் இசைக்குத் தாரம் எனப் பெயரிட்டது இயற்கையேயாகும். மேலும் இவ்வொலியோடு ஆடவர் தங்கள் குரலினையும் ஒலித்துக் கண்டமையால் தாரவொலி (எப்பகுதியிலும் முதலொலி) ஆடவர் குரலினை ஒத்தது எனவும் கூறப்பட்டது.

இவ்வியற்கை முறையில் குழலில் அடுத்த துளை வழி எழும் ஒலி குரல் எனப்பட்டது. இவ்வொலி இயல்பாகவே மகளிர் குரலை ஒத்ததால் குரல் எனப் பெயரிடப்பட்டது. இக்கருத்துக்கள் யாவும் இக்காலமும் மாறுபாடுறாது இருப்பதை இசைவாணர்கள் நன்கு அறியக்கூடும்.

அடுத்த துளையின் வழி எழும் ஒலிக்குத் **துத்தம்** எனப் பெயர்கூறப்பட்டது. இது மூன்றும் இசையாதலாலும் நடுவிசையாதலாலும் இடைநின்ற இவ்விசைக்குத் துத்தம் எனப்பட்டது. துத்தம்—துந்தம்—துருத்தி—என்ற சொற்கள் ஒரு பொருளினவாய் இடைப்பட்ட இடத்தினைக் குறிக்கும் என்பர் பெரியோர். இனி இந்த இசைகளை முறையே (தோற்ற முறையில்) எழுதினால்

க.	—	தாரம்				
உ.	—	0	—	குரல்		
௩.	—	0	—	0	—	துத்தம்

என நிற்கும். இதுவரை குழற் கருவியில் வலது கை விரல்களால் துளைகள் அடைத்து விடப்பட்டன. இனி அடுத்த துளை இடது கை விரலால் முதன் முறையில் அடைத்து விடுவதுபற்றி உழை எனப்பட்டது. அதற்கடுத்த துளை வந்த ஒலி **இளி** எனப்பட்டது. உழை, இடத்து எனும் பொருள்பட அமைக்கப்பெற்று இளி எல்லா இசைகளுக்கும் (இனித்தோன்றும் இசைகள்) அடிமணையாக நிற்பதறிந்து இளி எனப் பெயர் அமைக்கப்பெற்றது. இளியிசைக்குப் பட்டடை என்ற பெயரும் உண்டு.

முன்னைய மூன்றிசைகளோடு பின்னைய இவ்விரண்டிசைகளையும் முறையே எழுத —

க. தாரம்
உ. 0 — குரல்
ங. 0 — 0 — துத்தம்
ச. 0 — 0 — 0 — உழை
ரு. 0 — 0 — 0 — 0 — இளி.

என நிற்கும் இவையாவும் ஒரு தொகுதியாகுமிடத்து.

தாரம் — குரல் — துத்தம் — உழை — இளி — என அமையும். இத்தகைய ஐந்திசைகளே முதன் முதலில் பழந் தமிழ் நாட்டு முல்லைநில மக்களால் இயற்கை முறையில் ஐந்து துளையிட்ட குழற் கருவியின்மூலம் கண்டு உணரப்பட்டது. இதுவே பொதுவான மக்களுணர்வாகும்.

இப் பொதுமுறை எக்காலத்தும், எத்தேயத்தும், எம்மக்களுக்கும் இன்றியமையாத, இயற்கையான அடிப்படையான ஓர் ஒப்பற்றமுறையாதலால் பண்டைய தமிழ்க்குடிமக்கள் அறிவிலும் இப்பொதுத்தன்மையான ஒரு முறை தோன்றியது என்பதில் வியப்பொன்றுமில்லை.

மேலும். மேற்கூறிய (பத்துப்பாட்டு) பெரும்பாணாற்றுப் படை அடிகளில்...........முனையிற் குமிழின்

புழற்கோட்டுத் தொடுத்த மரம்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி.........எனக்

கூறப்படுவதால் அம்மக்களே நரம்புக்கருவியாகிய யாழ்க் கருவியினையும் முதன்முதல் ஆக்கினர் என நன்கு உணரலாம். அவ்வாறு ஆக்கப்பெற்ற முதற்கருவியின் பெயர் வில்யாழ் என்பதும் நன்கு அறியலாகும்.

வில்யாழில் முதன் முதலாக (இயற்கைக் குழல் வழி எழுந்த ஒலிக்கேற்ப) ஐந்து நன்மைகள் கட்டப்பெற்று கருவியின் அமைப்புமுறையில் முன்னை ஐந்து நரம்புகளின் செம்பால் (சரிபாதி) அளவான பின்னைய ஐந்து நரம்புகளும் கட்டப்பெற வில்யாழின் வளர்ச்சி பத்துநரம்புகள் உடைய யாழ்க்கருவியாயிற்று.

இவ்வழியேதான் இசைத்தமிழ் வளரத் தொடங்கியதென உறுதியாகக் கூறலாம். நரம்பின் நீங்குரல்கள் குழலொலியினைக் கொண்டு நிறுக்கப்பெற்ற காலத்தே ஒவ்வொரு ஒலியின் அலகு முறைகளை நன்கு அளந்தறிந்துணர வாய்ப்பும் ஏற்பட்டது. இம் முறையில் தாரம் முதல் இளிவரை எழுதினால்

இசைநிலை = தாரம் — குரல் — துத்தம் — உழை — இளி
அலகுநிலை = 0 — ச — ச — ரு — ச —
என நிற்கும்.

இவ்வலகு முறைகளை கூட்டுத் தொகையாக எழுதினால் —
இசைநிலை = தாரம் — குரல் — துத்தம் — உழை — இளி —
அலகுநிலை = 0 — ச — அ — யிரு — யின —
என நிற்கும். இவ்வாறு நிரல் வகையில் அமைவுற்ற ஐந்திசைகளையும் குழற்கருவியிலும், யாழ்க் கருவியிலும், ஊதல்–பண்ணல் எனும் தொழில்வாய்ப்படுத்தி, எல்லா இசைகளும் ஒருங்கே, ஒன்றுவிட்டு ஒவ்வொன்றாக ஒலித்து அதனால் செவிப்புலனுக்கு ஏற்படும் ஒருவகை இன்ப வாயிலாக நன்கு உணரப்பெற்ற காலத்தே, இவ்விசைத் தொகுதிக்குப் பெயர்கூறும் நிலையும் ஏற்பட்டது. அப்பெயரும் இயற்கை முறையில் முதலிசையாகிய தாரம் எனும் சொல்லால் **தாரப்பண்** எனவாயிற்று.

பின்னர் கால வகையில் முதன் முதலாகத் தோன்றிய இப் பண்ணினை, **ஆசான்** என்ற பெயராலும் குறியீடு செய்யப்பெற்றது. பின்பு இசைப் பகுதிகள் நிரம்ப நன்கு உணரப்பட்ட காலத்தே முதன்முதற்றோன்றிய ஏழிசையமைப்பில் ஒரு பண்ணிற்கும் ஆசான் என்றமையால், இப்பண் ஐந்திசைகள்கொண்டு நடத்தலால், இதுவே **ஆசான்திறம்** என்ற பெயரையும் பெற்றுவிட்டது.

முத்தமிழ்ப் புலமை யாவும் முறையே நிரம்பப்பெற்ற இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் புறஞ்சேரியிறுத்த காதையில்—

"பாய்கலைப் பாவை பாடற் பாணி
ஆசான் றிறத்தின் அமைவரக் கேட்டு" ....எனக் கூறியுள்ளதும் இதற்கு அரும்பதவுரை எழுதிய பெருந்தகையார்

"ஆசான் திறம் = காந்தாரம்,, ஆசானென்று ஒரு பண்ணிற்குப் பெயராகவும் இசைத் தமிழிற் கூறுப,, எனக் கூறியுள்ளதும் அடியார்க்கு நல்லார் உரையில் = "ஆசான்சாதி நால்வகையாவன ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம் = புறச்சாதி சிகண்டி = அருகுசாதி தசாக்கிரி = பெருகுசாதி, சுத்தகாந்தாரம்,, எனவும் கூறப்பட்டு "பண் — பண்ணியற்றிறம் — திறம் — திறத்திறம் — என : நால்வகைப்படும். (தொடரும்)

திருத்தம்:— சென்ற இதழில் 239 ஆம் பக்கம் மூன்றும்பத்தி 12ஆம் வரியில் பொருள் பயவாது என்பதன்பின் '**நிற்கும் என்றுகருதி அவர் பொருள் பயவாது**' என்றுசேர்த்துக்கொள்க.

கடிசொல் லில்லைக்காலத்துப் படினே.

சு. கு. அருணாசலனார்,

[அறுவை வணிகர், அம்மாப்பேட்டை, சேலம்.]

அலால சுந்தரஞ் செட்டியார் என்பார் மதுரைத் தமிழ்க் கழகப் பொன் விழாவில் சைகிள் முதலான பிறமொழிச் சொல் லையும் தமிழில் வழங்கலாமென்றுகூறி இத்துறையில் தொல்காப் பியனார் நமக்கு வழிகாட்டியுள்ளாரென்று 'கடிசொல்லில்லைக் காலத்துப் படினே' (சொல். சருஉ) என்னும் நூற்பாவைத் தம் போலிக் கூற்றிற்குச் சான்று காட்டினார். இதன் பொருந்தா மையை அன்று தலைமை தாங்கிய நாவலர் சோமசுந்தர பாரதி யாரும் மறுத்தாரில்லை. அதனால் சொற்பொழிவாளரின் கூற் றப்புரையற்றதென்றும் கொள்ளத்தக்கதென்றும் பலரும் கரு துவதால் இதன் பொருந்தாமையை விளக்கியெழுதுதலும் எமக்குக் கடனாயிற்று. இச்சொற்பொழிவும் பொன்விழா மல ரில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூற்பா புதிதாகச் சொல்லாக்கிக் கோடற்குத் துணை செய்கின்றதல்லது தமிழில் பிறமொழி கலக்கலாமென்பதற்குத் துணைசெய்கின்றிலதென்பது தொல்காப்பிய உரையை ஒருமுறை நோக்குவார்க்கும் புலப்படும். தொல்காப்பியர் இலங்கணங் கூறுவது தமிழ்ச் சொற்கே என்பதையும் மறத்தல் கூடாது. செய்யுட் சொல் இவை என்பார். "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென், றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" என எச்சவியலில் (க) குறித்தார். நடுநிலையுடைய மொழிநூலறிஞர் எவரும் செய்யுட்கு வடசொல் வேண்டுமென்று கருதார். தமிழ் தனித்து இயங்கவல்லது என்பர் கால்டுவெல். இதுபற்றிப் பின்னர் விரித்து எழுதியுள்ளேம். இதனால் வட சொல்லையும் செய்யுட்சொல் என்று தொல்காப்பியர் கூறியது வருந்தத்தக்கதே.

சைகிள் திசைச்சொல். அதனால் அதனைத் தமிழில் புகட் டலாமென்பது இவர் கருத்தெனின் அதுவும் பொருந்தாது. என்னை? சைகிள் திசைச்சொல்லன்று; ஆங்கிலச் சொல்லாதலி னென்பது இவர் திசைச்சொல்லிலக்கணமே அறியாரென்பது எமது ஆய்வுரை உரைப்பவே விளங்கும்.

திசைச்சொல்லென்பதன் இலக்கணம் தொல்காப்பியனார் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும், தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி' என்னும் நூற்பா (சொல் சOO) வால்

ஓதினர். திசைச்சொல் செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தாங்குறித்த பொருள் விளக்கும். எனவே அவ்வந்நாட்டுத் திசைச்சொல் அவ்வந்நாட்டில் பொருள் விளங்குதல்போல ஏனை நாடுகளில் எந்நிலத்தும் பொருள் விளங்கும் இயற்சொல் போலப் பொருள் விளங்கா வென்பது பெறப்பட்டது. தங்குறிப்பினவென்று தனிமொழி தம்பொருளுணர்த்துமாற்றுக்குச் சொல்லினர்; இருமொழி தொடருமிடத்துத் தள்ளை வந்தான் என வேண்டியவாறு வரப் பெறுமென்றாரல்லரென்றறிக. திசைச்சொல் பிறர் கூறுமாறு கொடுந் தமிழைக் குறிப்பதுமன்று. என்னை? 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நில'மென்றமையானது செந்தமிழ் வழங்கிய பன்னிரு தமிழ்நாடெனப் பொருள்படுமன்றிச் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலமெனப் பொருள் படாமையானும், செந்தமிழினின்றுஞ் சிதைந்து வழங்கு மொழியே கொடுந் தமிழெனின், அஃதிழிந்தோர் வழக்காகலிற் கொள்ளப்படாமையானும், அத்தமிழினின்றும் பிறந்த பிறிதொரு மொழியெனின், அது கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் என்றாற்போல வேறு பெயர்பெறலன்றிக் கொடுந்தமிழெனல் கூடாமையானும் அக்கன்னட முதலாயினவும் ஆசிரியர் காலத்தின்மையானும், ஆண்டுச் செந்தமிழென்றது செந்தமிழியற்கையுந் திரிபுஞ் சேர்ந்த பன்னிரு நாடாகலானும் ஆசிரியர் பன்னிரு நிலமென்றதன்றிப் பன்னிரு கொடுந்தமிழ் நிலமெனக் கூறாமையானும் பிறாண்டும் கொடுந்தமிழெனல் காணப்படாமையானுமென்பது. உரையாசிரியர் காட்டுக்களும் திசைச் சொல்லைத் தமிழ்ச் சொல்லென்றே தெரிவிக்கும். ஆங்கிலத்தில் திசைச் சொல்லை மண்டிலத் திரிபு (Provincialism) என்பர். இவற்றால் ஆங்கில முதலான பிறமொழியின் சொல்லையெல்லாம் அவ்வம் மொழியின் சொல்லாகக் குறிக்கவேண்டுமென்பதல்லது திசைச் சொல்லெனல் கூடாமையறிக.

இருவகை வழக்கும் கண்டு புதிதாகத் தமிழில் சொல்லாக்கிக் கோடல் தமிழர்க்குப் புதிதுமன்று. தொல்காப்பியனாரே வழக்குஞ் செய்யுளுமாராய்ந்தே தம் நூலை யாத்தாரென்பது "வழக்கும் செய்யுளுமாயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்னும் பாயிரப் பகுதியால் விளங்கும். இதனை நூல் நெடுகவும் காணலாம். 'குரங்கினேற்றினைக் கடுவனென்றலும்' என்னும் மரபியல் நூற்பா (சஅ) வழக்கினைத் தொல்காப்பியர் நன்கு ஆய்ந்தவர் என்பதற்கு அமையுஞ்சான்றாயிற்று. இதனால் தொல்காப்பியர் நாளில் ஆண்குரங்கு—கடுவன் எனவும், கூகை—கோட்டான் எனவும், செவ்வாய்க்கிளி—தத்தை

எனவும் வெவ்வாய் வெருகு—பூசையெனவும், ஆண்குதிரை—சேவல் எனவும், இருள்நிறப்பன்றி—ஏனம் எனவும், ஆண் எருமை-கண்டி எனவும் வழங்கின என்றறிகிறோம்.

இனி இவற்றின் பொருள் காண்பாம். கடுவன்: ஆண் குரங்கினும் பெண் குரங்கு மந்தமாயிருத்தல்பற்றி மந்தி எனப்பட்டது. ஆண் குரங்கு மந்தியினும் கடுமை, சுறுசுறுப்பு உள்ளமைபற்றிக் கடுவனெனப்பட்டது. கோட்டான்: கூகைமரக் கோடு விடாமையிற் கோட்டானென்னும் பெயர்பெற்றதென்றற்கு 'மரம்பயில் கூகை' யென்பர் தொல்காப்பியர். கோடு—மரக்கிளை 'கோடுவாழ் குரங்கும்' (மரபியல் கரு.) என்னும் நூற்பாவில் கோடு அப்பொருளாதலறிக. தத்தை: பெருங் கிளி தென்னை முதலிய மரங்களில் தொத்துவதால் 'தொத்தை' யெனப் பெயர்பெற்றுத் 'தத்தை' யெனத் திரிந்தது. சிறு கிளிக்கும் அவ்வியல்புண்மையான் அப்பெயர் (தத்தை) கொடுத்தலமையும். இச்சொல்லே இன்று இந்தியில் 'தோதா' எனச் சிதைந்து வழங்குகிறது. செவ்வாய்க்கிளியென்பதனைச் சிறு கிளி மேற்கொள்க. வெவ்வாய் வெருகு: பூசை—பூசுதல், ஒத்துதல் இவை மென்செயல். அதனால் மெத்தென நடக்கும் விலங்கு பூசை (பூனை) யெனப்பட்டது. மெத்தென அரவமின்றி நடக்கும் ஒற்றுமையான் 'படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர்கொள்ளும் வெரு'கினை' இல்லுறை பூசையின் பெயர் கொடுத்துச் சொல்லலுமமையும். 'பார்நடை வெரு' கென்பது புறநானூறு (கூஉசு) (உரை, மெத்தென்ற நடையையுடைய காட்டுப்பூனை) ஊன் தின்னும் வாயினையுடைமையின் 'வெவ்வாய்' எனப்பட்டது. ஆண் குதிரை: சேவும் ... ஆண்பாற் பெயராதலின் (மரபியல் உ) ஆண் குதிரை சேவுடன் அல்லீறு பெற்றுச் சேவலென வழங்கிற்று. சேங்கன்று (ஆண் கன்று) என்னும் வழக்கை நோக்குக. சேவு என்பதில் உகாரமும் மெய்யும் நீங்கினால் ஏவாகும். பெண்ணினும் ஆண் பெரிதாகலின் 'ஏபெற்றாகு' (உரி. எ) மென்றார் தொல்காப்பியர். (பெற்று—பெருக்கம்) ஈது அக்காலத்துப் பயின்றதுபோலுமென்பர் சேனாவரையர். அல்லீறு பறவைக்கே வழங்குகிறது. சிறப்புச் சொல்லைப் பொதுப்பொருளில் 'ஆண் குதிரைக்கு' தொல்காப்பியர் காலத்தில் வழங்கப்பட்டது. ஏ—சே—சேவு—சேவல். ஏ—ஏறு—ஏற்றை யெனவும் திரியும்.

இனி இன்னொரு கருத்து. குதிரை சிறகொடு சிவணாதாயினும் அதனைக் கடுவிசைபற்றிப் பறப்பதுபோலச் சொல்லுதலமையும். அதனைப் 'புள்ளியற்கலிமா' என்பர். (கற்பு ருக) தொல்காப்பியர்.

"வான் வழங்கியற்கைவளிபூட் டினையோ
மானுரு வாகநின்மனம்பூட் டினையோ" (அகம் ௩அச)

என்பதுவும் அது. இவ்வழக்கு இக்காலத்தரிதாயிற்று. ஏனம்: இரு (கருமை) இல்—எல்—ஏல்—ஏன்—ஏனம்—ஏனம் கருமையைக்குறித்தலின் இருள் நிறப்பன்றி ஏனமெனப்பட்டது. (ஏன்—ஏனை—யானை—கருநிறம் பற்றியே 'யானை' என்ற சொல்லும் தோன்றிற்று) ஆணெருமை: கன்று—கண்டு—கண்டி—கடுத்தது. கள்—கடு—கடா. கள்ளுதல்—கடுத்தல். பருத்துள்ள எருமை கண்டியெனப்பட்டது. அது காணலாயிற்றில்லை. 'கடனறிந்தோர்' என்றதனுன் வழக்கினுஞ் செய்யுளினும் அவை வந்தமையிற் கடப்பாடறிவோர்க்குக் கடியலாகாதென்றவாறு. இன்னும் இவ்வழுவமைதியாலே கோழியை வாரணமென்றலும் 'வெருகினை' விடையென்றலும்போல்வன பலவுங்கொள்க. அவை 'கானவாரண மீனுங் கொடியொடு வயிற்பட நிறீஇ' (முருகு உகக) 'வெருக்கு விடையன்ன வெருணோக்குக் கயந்தலை' (புறம் எாஉச) என வரும். கோழியின் முகமும் யானையின் முகமும் சங்குபோன்றிருத்தலின் கோழியும் யானையும் வாரணமெனப்பட்டன. வாரணம்—சங்கு; வார் மண்ணைக் கிளறுதல். கோழி குப்பைக் கூளங்களைக் கிளறிக் கிளறியுண்ணும். கோழிக் கிளறுதல் என்னும் வழக்கையும் நோக்குக. யானை புல் முதலியவற்றை வாரிப்போட்டுண்ணும். இதனல் யானை கோழிக்கு உவமையாகு பெயராய் 'வாரணம் என்ற சொல் அமைந்தது. வெருகு (காட்டுப் பூனை) மிகப் பருத்திருப்பதால் விடை (விடைத்தல்—பருத்தல்) எனப்பட்டது. இவற்றின் பொருண்முறையால் தமிழர் சொல்லாக்கிக் கொண்ட முறை விளங்கும். இக்கூறியவற்றால் சொற்களைப் புதிதாகப் படைத்ததற்குத் தொல்காப்பியரே வழிகாட்டியுள்ளாரென்பது நனி விளங்கும்.

அருணகிரிநாதரும், குமரகுருபரரும் தம் செய்யுளில் முறையே சபாசு, சலாம் என்ற சொற்களை வழங்கியுள்ளனரென்று இவர் கூறுவதாலே நாமும் வடமொழியல்லாத பிற மொழிச்சொற்களைத் திரித்து வழங்கவேண்டுமென்னும் யாப்புறவில்லை. இவ்விருவரும் தமிழ்க்கதிகாரிகளல்லரென்க. இவர்கள் காலத்தில் மொழிநூற்பயிற்சியும் மொழி உணர்ச்சியுமில்லை. அருணகிரிநாதர், குமரகுருபரர் ஆகிய இவர்கள் பெரியவர்களா? தமிழ் பெரிதா? அருணகிரி, குமரகுருபரர் வேண்டுமா? தமிழ் வேண்டுமா? இவர்களுக்கு முன் பல்லூழி தமிழ் நிலைபெற்று வந்துள்ளது. இவர்கள் தமிழ்ப் புலவர்கள் பலருளிருவர்.

(தொடரும்)